28. சில நாட்களே, இந்தச் சட்டமன்றக் கூட்டம் நடைபெறவிருக்கின்றது. விவாதத்திற்கு முக்கியமான சட்டப் பணிகள் முன் வைக்கப்பட்டுள்ளன. தனக்கெனத் தனித் தன்மையையும், மரபையும், மங்காப் புகழையும் பெற்றிருக்கின்ற தமிழகச் சட்ட மன்ற உறுப்பினர்கள், அவையின் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்பையும், ஆக்க பூர்வமான ஆலோசனைகளையும் வழங்குவார்கள் என நான் எதிர்பார்க்கின்றேன். நமது மாநில மக்கள் வளம் பெருகி, மகிழ்வுடன் வாழ்வதற்காக நீங்கள் அனைவரும் மேற்கொள்ளவிருக்கும் முயற்சிகள் வெற்றி பெற உங்களனைவருக்கும் எனது நல் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றேன்.

வணக்கம்.

இணைப்பு III.

[83..ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 108-க்கான விடையைக் காண்க].

தமிழ் நாட்டில் குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் மிசா சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டிருந்தவர்களின் அரசியல் கட்சிச் சார்புகள் பின்வருமாறு:—

I.	உள்நாட்டு அவசர நிலைக் காலத்தில் தடை விதிக்கப்பட்ட இயக்கங்கள் :—	
	1. ஆர்.எஸ்.எஸ்.	36
	2. கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்டு-லெனினிஸ்டு) ..	51
	3. ஆனந்த மார்க்	6
II.	அரசியல் கட்சிகள் :—	
	1. தி.மு.க.	419
	2. காங்கிரஸ் (ஸ்தாபனம்)	24
	3. ஜனசங்கம்	11
	4. சோஷலிஸ்டுக் கட்சி	3
	5. கம்யூனிஸ்டு (மார்க்சிஸ்டு)	70
	6. அ.தி.மு.க.	5
	7. பார்வார்டு பிளாக்	1
	8. தி.க.	35
	9. தமிழரசுக் கட்சி	1
III.	அரிசி மற்றும் உணவுப் பொருட்களைச் சட்ட விரோதமாகக் கடத்தியவர்கள்	37
IV.	சமூக விரோதச் செயல்களில் ஈடுபட்டவர்கள் ..	47
V.	மதுவிலக்குக் குற்றவாளிகள்	22
	மொத்தம் ..	768